DEPOSITION OF WITNESS
( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)
***
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 95/2026
Miscellaneous :
Sessions : PW 6
Deposition of Witness for

**எதிரி ஆஜரில்லை எதிரி தரப்பில் 355 BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.**

| | |
|---|---|
| Name | நாராயணமூர்த்தி |
| Father / Husband Name | பாண்டுரங்கன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of **18.06.2026**

**முதல் விசாரணை:**

1.)நான் தற்போது அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக இருந்து வருகிறேன். அச்சிறுபாக்கம் காவல் நிலையத்தில் 2025 ம் வருடம் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த தியாகராஜன் என்பவரின் கையொப்பம் மற்றும் விசாரணை பற்றி நன்கு தெரியும் என்பதாலும் அவர் பணியிட மாறுதலாகி சென்றுவிட்டதால் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன். கடந்த 12.11.2025 ம் தேதி மதியம் 1.00 மணிக்கு இலக்கியா என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த புகாரை பெற்று நிலைய குற்ற எண். 286/2025 BNS பிரிவுகள் 329(4) 296(b) 115(2) 351(2) and r/w 4 TNPHW Act ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். **(அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ 2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).**

2.) பின்னர் 12.11.2025 ஆம் தேதி மதியம் 2.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் சத்தியதாஸ் மற்றும் மைக்கேல் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார். **(அந்த பார்வை மகசர் அசாஆ 3 ஆகவும் மாதிரி வரைபடம் அசாஆ 4 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது).** பின்னர் பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலான சாட்சிகளை விசாரணை செய்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தார். எதிரியை தேடிவந்த நிலையில் 1ம் எதிரி ரங்கையன் என்பவரை 12.11.2025 ம் தேதி மாலை 4.00 மணிக்கு அச்சிறுபாக்கம் காவல் நிலையம் அருகே நின்று கொண்டிருந்த எதிரியை கைது செய்து நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தியுள்ளார். 2ம் எதிரியை கைது செய்யவில்லை. இத்துடன் வழக்கு விசாரணை முடித்து எதிரிகள் மீது BNS பிரிவுகள் 329(4) 296(b) 115(2) 351(2) and r/w 4 TNPHW Act பிரிவுகளின் கீழ் இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

**குறுக்கு விசாரணை.**

3. நான் இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி இல்லை என்றாலும் வழக்கு ஆவணங்களை பார்வையிட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரிதான்.

சக அதிகாரி சம்பவயிடம் சென்று சாட்சிகளை விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது தாக்கல் செய்த இறுதி அறிக்கையில் ஆவணங்களை பார்வையிட்டு அவருக்கு பவ்யப்பட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**